# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது 7 நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,529,862 தொகையான நிதியுதவி தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிராமையால் அந் நிதியுதவியை மீளப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக முன்னைய ஆண்டின் இலங்கை தொழிற்துறை பயிற்சி அதிகாரசபையின் 12 நிலையங்களுக்கு பாடநெறிகளுக்காக உபகரணங்கள் வழங்கப்படுவதற்கு ரூபா 3,360,399 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் செலவிடப்படாத ரூபா 1,414,588 தொகை பெறவேண்டிய நிதியாக நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளியீடுகளின் விற்பனை வருமானம் ரூபா 389,500 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 493,539 தொகையான மாணவர் முன்னேற்ற அறிக்கைப் புத்தகங்களின் இருப்பும் ரூபா 2,557,490 தொகையான வைப்புகள் மற்றும் பெறவேண்டிய மீதிகள் பரீட்சிக்கப்படுவதற்கு உரித்தான, பட்டோலைகள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் மற்றும் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை ஆகியன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | பிரயாணக் கொடுப்பனவுகள் மேற்கொள்கையில் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இணைந்த படிப்பணங்களின் எல்லைகள் கருத்திற்கொள்ளப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த மையால் 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 14,649 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1994 ஆகஸ்ட் 3 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இல. 01/2002 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒதுக்கப்பட்ட வாகனங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினையும் ஆணைக்குழுவின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1999 ஒக்டோபர் 08 ஆந்திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3.1(iii) ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் குழுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டிய 6 உத்தியோகத்தர்களுக்கு, வெவ்வேறாக பயணிப்பதற்காக வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 5.2.1 ஆம் பிரிவு | 2009 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்ட பாதீட்டுடன் எதிர்வு கூறப்பட்ட நிதி நிலைமைக் கூற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 8.3.5(அ) ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் ‘‘சீ’’ தரத்திலான கூட்டுத்தாபனத்தில் உத்தியோகபூர்வ வாகனங்கள் தலைவர், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர்களுக்காக மாத்திரமே ஒதுக்கப்படக் கூடிய போதிலும் இவ் ஏற்பாடுகளுக்கு முரணாக ‘‘சீ’’ தரத்தின் கீழான சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற் ஒதுக்கப்பட்ட வாகனம் வழங்கப்பட்டு இதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஒரு வருடத்திற்கு ரூபா 165,600 படி ரூபா 496,800 தொகையான எரிபொருள் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2008 யூன் 26 ஆம் திகதிய இல. 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | குழுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகையில் போக்குவரத்திற்காக ஆகக் கூடிய தூரமான 50 கி.மீ. காண்பிக்கப்பட்ட போதிலும் இரு உத்தியோகத்தர்களுக்காக அவ்வெல்லைகள் மீறப்பட்டு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்கு முன்னர் ரூபா 1,495,496 தொகையான மிகை காணப்பட்டதுடன் இதனையொத்த முன்னைய ஆண்டில் ரூபா 1,575,803 தொகையான மிகை காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 80,307 தொகையான வீழ்ச்சிக்கு வருமானத்தில் குறைவு மற்றும் செலவினங்களில் அதிகரிப்பு போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை எய்துவதற்கு ஆணைக்குழுவால் முடியாதிருந்ததுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் போது தனியார் மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புப் பிரிவின் தொழிற்தகமைபெற்ற பயிற்சி நிறுவகங்களில் 35 பாடநெறிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுவதற்கு ரூபா 5 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 19 பாடநெறிகளுக்கு மாத்திரமே நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. 35 பாடநெறிகளுக்கு இந் நிதி வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந் நிறுவகங்களின் பாடநெறிக்காக உள்ள உபகரணங்களை எதிர்பார்த்த மட்டத்தைப் பார்க்கிலும் கீழ் மட்டத்தில் நிலவியமையால் ஒவ்வொரு பாடநெறிகளுக்கு மேலதிகப் பண அளவு ஒதுக்கப்படுவதற்கு நேர்ந்தமையால் இந் நிலை ஏற்பட்டிருந்தமை சபைப் பணிப்பாளர் நாயகத்தால் 2013 மே மாதத்தின் போது எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 225 நிறுவகங்களில் பதிவுகள் புதுப்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 211 நிறுவகங்களுக்கு மாத்திரமே பதிவுகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. இது இலக்கிடப்பட்ட பெறுமதியின் 93.8 சதவீதமாகக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது பயிற்சிப் பாடநெறிகளை தரப்படுத்தலுக்கான இலக்குகள் பெறப்பட்ட விண்ணப்பங்கள், மதிப்பிடப்பட்ட மற்றும் தரப்படுத்தப்பட்ட எண்ணிக்கைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| பயிற்சி வழங்கும் நிறுவகம் | இலக்கிடப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற பாடநெறிகளின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | ஒப்புதல் பாடநெறிகளின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகள் ஒப்புதல் எண்ணிக்கை பாடநெறிகளின் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|---|
| தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை | 400 | 31 | 27 | 18 | |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | | 45 | 66 | 31 | |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | | 21 | 45 | 26 | |
| இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை | | 138 | 244 | 130 | |
| வேறு அரச நிறுவகங்கள் | | 53 | 27 | 9 | |
| | | 288 | 409 | 214 | 52 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் | 50 | 89 | 89 | 57 | 64 |
| | 450 | 377 | 498 | 271 | |

(ஈ) மீளாய்வாண்டின் போது பயிற்சி பாடநெறிகளின் ஒப்புதலை புதுப்பிப்பதற்காக பயிற்சி வழங்கும் நிறுவகங்களிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் ஒப்புதலை புதுப்பித்தல் தொடர்பான எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| பயிற்சி வழங்கும் நிறுவகம் | இலக்கிடப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | ஒப்புதல்கள் புதுப்பிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | ஒப்புதல் புதுப்பிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை மதிப்பாய்வு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கையின் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|---|
| தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை | 96 | 02 | 05 | 04 | |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | | - | 09 | 06 | |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | | 19 | 25 | 20 | |
| இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை | | 26 | 40 | 38 | |
| வேறு அரச நிறுவகங்கள் | | 04 | - | - | |
| | | 51 | 79 | 68 | 86 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் | 57 | 28 | 41 | 35 | 85 |

(உ) தேசிய தொழில்சார் பயிற்சி தகைமைப் பிரிவு

தேசிய தொழிற்திறன் தகைமை முறைமையை விஸ்தரித்து பேணுவதற்கான மதிப்பீட்டாளர்களுக்கு 200 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், உண்மையாக 76 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஊ) 2012 ஆம் ஆண்டின் கூட்டுத்திட்டத்தின் பிரகாரம் நாடெங்கிலும் நடாத்தப்பட்ட பயிற்சி நிறுவகம் தொடர்பான ஓர் மதிப்பாய்வை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி உதவி வழங்கப்படல்

(i) முன்னைய ஆண்டின் போது நிதியுதவி வழங்கப்பட்டிருந்த அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் 10 அரச சார்பற்ற அமைப்புகளால் உடன்படிக்கையின் பிரகாரம் உபகரணங்கள் கொள்வனவு, ஒப்புதல் நடவடிக்கைகள், பயன்படுத்தப்படாத பணம் மீள அனுப்பிவைத்தல் போன்ற விடயங்களை மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| நிறுவகம் | வழங்கப்பட்ட நிதியுதவி பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 3,103,030 |
| இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை | 7,382,110 |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 4,119,919 |
| கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்பாட்டுத் திணைக்களம் | 383,850 |
| இலங்கை அச்சீட்டு நிறுவகம் | 2,000,000 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் | 2,137,258 |

(ii) 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை 15 மாவட்டங்களில் அரச பிரிவின் 68 பாடநெறிகள் ஒப்புதலுக்காக வழங்கப்பட்ட ரூபா 19,213,747 தொகையான நிதியுதவிகளுக்குரிய பாடநெறிகள் 2013 மார்ச் மாதமளவிலும் ஒப்புதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்துறைக் கல்வி அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்சார் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி நிறுவகம் பதிவுசெய்யப்பட்டு நாளதுவரையாக மீள புதுப்பிக்கப்பட வேண்டும். சபை ஸ்தாபிக்கப்பட்ட திகதி முதல் 2,300 நிறுவகங்கள் பதிவுசெய்யப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது 809 நிறுவகங்கள் மாத்திரமே புதுப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,955,835 தொகை செலவிடப்பட்டு 20 ஆய்வுகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், தேவைப்பாட்டைத் தீர்மானிக்காதுவிடல், ஆராய்ச்சியை செயற்படுத்துவதற்காக தேவையான முறை ஒன்றைத் தயாரிக்கப்பட்டிராமை, சபை உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராமை, குறித்த காலப்பகுதியின் போது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமை, ஆராய்ச்சிக் கண்காணிப்பிற்கு தொழில்சார் மற்றும் தொழிநுட்ப பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இது மேற்கொள்ளப்பட்டிராமை, போன்ற விடயங்களினால் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் சபையின் நோக்கத்தை எய்துவதற்கான பங்களிப்பு போதாதிருந்தது.

(ஈ) மின்சார மற்றும் இலத்திரனியல் கைத்தொழிலுக்காக தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தைத் தயாரித்தல் (VET PLAN) தொடர்பாக மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரிய அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்படுவதற்கு 7 மாதங்கள் தாமதமடைந்திருந்த போதிலும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 105,000 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சுற்றுலா மற்றும் ஹொட்டேல் துறைக்காக தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தைத் தயாரித்தல் (VET PLAN) தொடர்பாக இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவ நிறுவகத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்

பிரகாரம் உரிய அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்படுவதற்கு 12 மாதங்கள் தாமதமடைந்திருந்த போதிலும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 205,920 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஏனைய அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் வளங்கள்

2003 யூன் 02 ஆம் திகதிய மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2012 சனவரி 02 ஆம் திகதி ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர், ஆட்சேர்க்கப்பட்ட நாள் முதல் வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளங்களும் படிப்பணங்களுமாக ரூபா 328,302 தொகை சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 பதவியணி நிர்வாகம்

ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை தொடர்பான விபரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
| நிறைவேற்றுத் தரம் | 31 | 23 | 8 | 26 | 23 | 3 |
| எழுதுவினைஞர் மற்றும் இணையான சேவைகள் | 32 | 26 | 6 | 30 | 22 | 8 |
| கனிஷ்ட | 19 | 16 | 3 | 17 | 16 | 1 |
| அமைய மற்றும் தற்காலிகமானவர்கள் | 01 | 01 | - | 01 | 01 | - |
| | 83 | 66 | 17 | 74 | 62 | 12 |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அத் திருத்திய பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் என்பவற்றிற்கிடையே செலவுகளில் 15 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையான வீச்சில் நிலவியமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் நிலவிய குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளின் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வாகனப் பயன்பாடு
(ஈ) பதவியணி முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு